தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி – தேவகோட்டை.

# மாதத் தேர்வு ஜூலை – 2024, சிவகங்கை மாவட்டம்
## விடைக்குறிப்பு

**வகுப்பு: 12** **பாடம்: உயிரியல் விலங்கியல்**

| Q. NO | | MARK |
|---|---|---|
| 1 | ஆ) தெலிடோகி | 1 |
| 2 | அ) ஜூலை 11, | 1 |
| 3 | இ) 28 வது வாரம் | 1 |
| 4 | ஆ) லீடிக் செல்கள் | 1 |
| 5 | ஆ) FSH மற்றும் LH ஹார்மோன்கள் சுரத்தலை தடுப்பதன் மூலம். | 1 |

### SECTION - 2

**குறிப்பு: ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.** (3 x 2 = 6) 2 Marks

<table>
<tr><th>Q.NO</th><th>ANSWERS</th><th>MARKS</th></tr>
<tr><td>6</td><td>கன்னி இனப்பெருக்கம் என்றால் என்ன? விலங்குகளிலிருந்து இரு எடுத்துக்காட்டுகள் தருக.<br>1. அண்ட செல்லானது கருவுறாமலேயே முழு உயிரியாக வளர்ச்சி அடையும் செயலுக்கு கன்னி இனப்பெருக்கம் என்று பெயர்.<br>2. எடுத்துக்காட்டு: செயற்கை கன்னி இனப்பெருக்கம் – வளை தசை புழுக்கள் மற்றும் கடல் அர்ச்சின்.<br>3. இளம் உயிரி கன்னி இனப்பெருக்கம் – கல்லீரல் புழு மற்றும் மொழுக்கு ஈ.<br>4. (அல்லது) ஏதேனும் இரண்டு எடுத்துக்காட்டுகள்:</td><td>1<br>½<br>½<br>(Total- 2)</td></tr>
<tr><td>7</td><td>பிளாஸ்மோடோமி (Plasmotomy) என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.<br>1. பல உட்கருக்களைக் கொண்ட உயிரிகளில், பெற்றோர் உயிரியின் உட்கருக்கள் பிரிந்து பல உட்கருக்களைக் கொண்ட சேய் உயிரிகளை உருவாக்குதல் பிளாஸ்மோடோமி (Plasmotomy) எனப்படும்.<br>2. எ.கா: ஒபாலினா மற்றும் பிலோமிக்ஸா (இராட்சத அமீபாக்கள்).</td><td>1 ½<br>½<br>(Total- 2)</td></tr>
<tr><td>8</td><td>
<br>அண்ட செல்லின்<br>வரைபடம்: 1 மதிப்பெண்<br>ஏதேனும் 2 பாகங்கள்: 1 மதிப்பெண்</td><td>1<br>1<br>(Total- 2)</td></tr>
</table>



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

<table>
<tr>
<td>9</td>
<td>கருக்குழல் தடை (வாசக்டொமி) விந்துக்குழல் தடை (டியூபெக்டமி) வேறுபடுத்துக்க.
<table>
<tr><th>கருக்குழல் தடை (டியூபெக்டமி)</th><th>விந்துக்குழல் தடை (வாசக்டமி)</th></tr>
<tr><td>இது பெண்களில் கருத்தரித்தலைத் தடுக்கும் அறுவை சிகிச்சை முறையாகும்.</td><td>இது அறுவை சிகிச்சை மூலம் ஆண்களின் இனப்பபெருக்கத்திறனைத் தடுக்கும் முறையாகும்.</td></tr>
<tr><td>இம்முறையில், பெண்களின் இரு அண்ட நாளங்களும் வெட்டப்படுகின்றன.</td><td>இம்முறையில், ஆண்களின் இரு விந்து நாளங்களும் வெட்டப்படுகின்றன.</td></tr>
</table>
</td>
<td>1<br><br>1<br><br>(Total- 2)</td>
</tr>
<tr>
<td>10</td>
<td>கருப்பை வாய் புற்றுநோய்:<br>
1. பால்வழிப்பரவும் நோய்.<br>
2. நோய்க்காரணி: மனித பாப்பில்லோமா வைரஸ் (HPV)<br>
கருப்பபைவாய் புற்றுநோயின் பொதுவான அறிகுறிகள்:<br>
3. இதனால் கருப்பபைவாய் செல்கள் இயல்புக்கு மாறான வளர்ச்சியை அடைகின்றன.<br>
4. இடுப்புவலி, கலவிக்ககால்வவாய் திரவ மிகைப்போக்கு, இயல்புக்கு மாறான இரத்தப்போக்கு.</td>
<td>½<br>½<br><br>½<br><br>½<br>(Total -2)</td>
</tr>
</table>

## SECTION – 3

**குறிப்பு: ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி. வினா எண் 15 க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** 3 x3 = 9 (3 MARKS)

| Q.NO | ANSWERS | MARKS |
|---|---|---|
| 11 | **உருவமொத்த அல்லது ஒரு கருமுட்டை இரட்டையர்கள்:**<br>1. கருமுட்டையின் முதல் பிளவிப் பெருகலின் போது உருவாகும் இரண்டு கருக்கோள செல்கள் தனித்தனியே பிரிந்து வளர்வதால், உருவாகும் இரட்டையர்கள்.<br>2. இவர்கள் உருவ ஒற்றுமை கொண்டவர்களாக, ஒரே வகையான மரபணுக்களைக்கொண்டவர்களாகக் காணப்படுவர்.<br>**உருவம் மாறுபட்ட அல்லது இரு கருமுட்டை இரட்டையர்கள்:**<br>3. இருவேறு அண்ட செல்கள் இருவேறு விந்து செல்களால் கருவுற்றதனால் உருவான கருமுட்டைகளிலிருந்து உருவானவர்கள்.<br>4. இந்த இரட்டையர்கள் ஒரே பாலினத்தவராகவோ அல்லது வேறுபட்ட பாலினத்தவராகவோ இருப்பர். ஆனால் உருவத்தில் மாறுபட்டிருப்பர். | 1<br><br>½<br><br>1<br><br>½<br>(Total -3) |
| 12 | **தாய்சேய் இணைப்புத்திசு ஒரு நாளமில்லலாச் சுரப்பித் திசு – நியாயப்படுத்து.**<br>1. தாய்சேய் இணைப்புத்திசு ஹார்மோன்களை சுரப்பதால், நாளமில்லா சுரப்பித் திசு என அழைக்கப்படுகிறது.<br>2. கர்ப்ப காலத்தில் தாய்சேய் இணைப்புத்திசு தற்ககாலிக நாளமில்லலாச் சுரப்பியாகச் செயல்படுகிறது. | 2 |

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | **ஏதேனும் இரண்டு ஹார்மோன்கள்:**<br>3. 'மனித கோரியானிக் கொனடோட்ரோபின் (hCG)',<br>4. மனித கோரியானிக் சொமட்டோ மாமோட்ரோபின் (hCS)' அல்லது 'மனித பிளாசன்டல் லாக்டோஜென் (hPL).<br>5. ஈஸ்டட்ரரோஜன் மற்றும் புரோஜெஸ்டிரான் போன்ற ஹார்மோன்களை உற்பத்தி செய்கிறது.<br>6. குழந்ததை பிறப்பின்போது 'ரிலாக்ஸின்' எனும் ஹார்மோனையும் சுரக்கிறது. | 1<br><br>(Total -3) |
| 13 | **ஒருங்கிணைவு முறைகளின் வகைகள்:**<br>**தலைப்பு: ½ மதிப்பெண். விளக்கம்: 1 மதிப்பெண்.**<br>**எடுத்துக்காட்டு: ½ மதிப்பெண்.**<br>**சுய கருவுறுதல்' (Autogamy):**<br>1. ஒரு செல்லிலிருந்தோ அல்லது ஒரே உயிரியிலிருந்தோ உருவாகின்ற ஆண் மற்றும் பெண் இன செல்கள் இணைந்து கருமுட்டையை உருவாக்குகின்றன.<br>2. **எ.கா:** ஆக்டினோஸ்பேரியம் மற்றும் பாரமீசியம்.<br>**'அயல் கருவுறுதல்' (exogamy):**<br>3. ஆண் மற்றும் பெண் என்னும் இரு தனித்தனி பெற்றோர்களிலிருந்து உருவாகின்ற ஆண் மற்றும் பெண் இனச்செல்கள் ஒன்றிணைந்து கருமுட்டை உருவாகிறது.<br>4. **எ.கா:** மனிதனில் ஆண் பெண் என்னும் இரு தனித்தனி உயிரிகள் காணப்படுதல்<br>**"முழுச்சேர்க்கை' (Hologamy):**<br>5. கீழ்நிலை உயிரிகளில், சில சமயங்கலில் முதிர்ந்த உயிரிகளே இனச் செல்கள் போன்று செயல்பட்டு ஒன்றிணைந்து புதிய உயிரிகளைத் தோற்றுவிக்கின்றன.<br>6. **எ.கா.** டிரைக்கோநிம்ஃபா (Trichonympha).<br>**இளம் செல் சேர்க்கை (Paedogamy):**<br>7. முதிர்ந்த பெற்றோர் செல்லிலிருந்து மறைமுகப்பிரிவு மூலம் உருவாகும் இரு இளம் சேய் செல்கள் இனச்செல்கள் போன்று செயல்பட்டு ஒன்றிணைந்து புதிய உயிரியைத் தோற்றுவிக்கும்.<br>8. **எ.கா.** ஆக்டினோபிரிஸ்.<br>**மாறுபட்ட செல்சேர்க்கை (Merogamy):**<br>9. அமைப்பில் மாறுபட்ட இரு சிறிய இனச்செல்கள் ஒன்றிணையும் முறை.<br>10. **எ.கா.** புரோட்டோசோவா.<br>**ஒத்த செல் சேர்க்கை (Isogamy):**<br>11. அமைப்பிலும் செயலிலும் ஒரே மாதிரியான இரு இனச்செல்கள் ஒன்றிணைதல் 'ஒத்த செல் சேர்க்கை' எனப்படும்.<br>12. **எ.கா.** மோனோசிஸ்டிஸ்.<br>**வேறுபட்ட செல் சேர்க்கை' (anisogamy):**<br>13. முற்றிலும் வேறுபட்ட இரு இனச் செல்கள் ஒன்றிணையும் முறை 'வேறுபட்ட செல் சேர்க்கை' (anisogamy) எனப்படும்.<br>14. **எ.கா.** உயர்வகை விலங்குகள். | Any 3<br><br>(Total -3) |

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 14 | **பனிக்குட துளைப்பு: முக்கியத்துவம்.**<br>1. ஆம்னியோசென்டெசிஸ், குழந்தை பிறப்புக்கு முன் செய்யப்படும் ஒரு தொழில் நுட்பமாகும்.<br>2. இத்தொழில் நுட்பம் மூலம் வளர்கருவின் குரோமோசோம் குறைபாடுகளைக் கண்டறியலாம். | 2<br><br>1<br>(Total-3) |
| 15<br>கட்டாய வினா | **விந்துசெல் உருவாக்கம்:**<br>**அ) பெருக்க நிலை:**<br>1. விந்து செல் வளர்ச்சியின் போது வித்தக நுண்குழலின் உட்பகுதியில், கரு மூல இனச் செல்கள் (Primordial germ cells), முதிராத ஸ்பெர்மட்டோகோனியா அல்லது விந்து தாய் செல்களாக (Sperm mother cells) உருப்பெறுகின்றன.<br>**ஆ) வளர்ச்சி நிலை:**<br>2. விந்து தாய் செல்கள் மாறுபாடடைந்து, முதல்நிலை விந்து செல்லலாக (Primary spermatocyte) உருப்பெறுகின்றன.<br>3. இச்செல்கள் 23 இணை அதாவது 46 குரோமோசோம்களைக் கொண்ட இரட்டை மய செல்களாகும்.<br>4. முதல்நிலை விந்து செல்களில் சில, முதல் குன்றல் பகுப்பின் விளைவாக இரண்டாகப் பிரிந்து இரண்டாம் நிலை விந்து செல்களை (Secondary spermatocyte) உருவாக்குகின்றன.<br>5. இவை 23 குரோமோசோம்களை மட்டுமே கொண்டுள்ள ஒற்றைமய செல்களாகும்.<br>**முதிர்ச்சி நிலை:**<br>6. இரண்டாம் நிலை விந்து செல்கள் இரண்டாம் குன்றல் பகுப்பின் இறுதியில் நான்கு ஒற்றைமய ஸ்பெர்மமாடிட்களை (Spermatid) உருவாக்குகின்றன.<br>7. **ஸ்பெர்மியோஜெனிசிஸ்' (Spermiogenesis):** ஸ்பெர்மமாடிட்கள் முதிர்ந்த முழுமையான விந்து செல்லலாக மாறும் செயல்.<br> | **விளக்கம்:**<br>2<br><br>**வரைபடம்**<br>1<br>(Total-3) |

www.Padasalai.Net

## SECTION - 4

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** (1 x 5 = 5) 5 MARKS

| Q.NO | ANSWERS | MARKS |
|---|---|---|
| 16 | **இனப்பெருக்க துணை தொழில்நுட்பங்கள். (ART)**<br>**தலைப்பு ½ மதிப்பெண். விளக்கம் ½ மதிப்பெண். ஏதேனும் 5 முறைகள்**<br>**அ) கருமுட்டடையை அண்டநாளத்தினுள் செலுத்துதல் (Zygote Intra Fallopian Transfer–ZIFT):**<br>1. இது உடல் வெளிக் கருவுறுதல் தொழில் நுட்பம் போன்றது.<br>2. இம்முறையில் 8 பிளாஸ்டோமியர்களைக் கொண்ட கருமுட்டடை லேப்ரராஸ்கோப்பி முறையில் அண்டநாளத்தினுள் செலுத்தப்படுகிறது.<br>3. கருமுட்டடையில் இயல்பபான செல்பிரிதல் நிகழ்ந்து கருக்கோளம் தோன்றி கருப்பபையை நோக்கி நகர்ந்து, பதிகின்றது.<br>**ஆ) கருப்பபை உள்இடமாற்றம் (Intra Uterine Transfer –IUT):**<br>1. 8 பிளாஸ்டோமியர்களை விட அதிகமான செல்களைக் கொண்ட கருவானது கருப்பபையினுள் செலுத்தப்பட்டு முழுவளர்ச்சி அடைகிறது.<br>**இ) அண்டநாளத்தினுள் இனச்சசெல் இடமாற்றம் (Gamete Intra Fallopian Transfer – GIFT):**<br>1. இம்முறையில், அண்டகத்திலிருந்து முட்டடைகள் சேகரிக்கப்பட்டு விந்து செல்களுடன் சேர்த்து ஒரு அண்ட நாளத்தினுள் வைக்கப்படுகின்றது.<br>2. கருவுறுதல் நிகழ்ந்த பின் உருவாகும் கருமுட்டடை கருப்பபையை நோக்கி நகர்ந்து கருப்பபையின் உட்படலத்தில் பதிகின்றது.<br>**ஈ) அண்ட சைட்டோபிளாசத்தினுள் விந்து செல்களை செலுத்துதல் (Intra Cytoplasmic Sperm Injection – ICSI):**<br>1. இம்முறையில் ஒரே ஒரு விந்து செல்லலை முட்டடையின் குவியப்புள்ளியில் செலுத்தி கருவுறச் செய்யப்படுகின்றது.<br>2. அதாவது, முட்டடையின் சைட்டோபிளாசத்திற்குள் விந்து செல்லலானது மிக கவனமாகச் செலுத்தப்படுகின்றது.<br>3. இதில் கருவுறுதல் வீதம் 75 முதல் 85% ஆகும்.<br>4. கருமுட்டடை 8 செல் கருக்கோள நிலையை அடைந்த உடன் பெண்ணின் கருப்பபைக்குள் மாற்றப்பட்டு கர்ப்பமடையச் செய்யப்படுகின்றது.<br>**உ) கருப்பபையினுள் விந்து செல்களை உட் செலுத்துதல் (IUI) / செயற்கை விந்தூட்டல் (AI):**<br>1. இச்சசெயல் முறை குறைந்த எண்ணிக்கையில் விந்து செல்களை உற்பத்தி செய்யும் ஆண்களுக்குச் செய்யக்கூடிய சிகிச்சை முறையாகும்.<br>2. இம்முறையில் கணவர் அல்லது உடல் நலமிக்க விந்துக் கொடையாளரிடமிருந்து விந்து திரவம் சேகரிக்கப்படுகிறது.<br>3. அண்டகத்ததைத் தூண்டி அதிக அண்டசெல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.<br>4. பின்னர் சேகரிக்கப்பட்ட விந்து செல்கள், கலவிக் கால்வவாய் வழியாக கருப்பபையினுள் செலுத்தப்படுகின்றன.<br>**5.** பின்னர், இயல்பபான கர்ப்பம் ஏற்படுகின்றது. | Total-5 |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 17 | **மாதவிடாய் சுழற்சியின் பல்வவேறு நிலைகளை விளக்குக.**<br>**மாதவிடாய் சுழற்சி (Menstrual Cycle):**<br>1. பெண்களில் பூப்படைதல் முதல் மாதவிடாய் நிறைவு வரை 28/29 நாட்களுக்கு ஒரு முறை 'மாதவிடாய் சுழற்சி' அல்லது 'அண்டக சுழற்சி' நிகழ்கிறது.<br>2. ஒரு மாதவிடாய்க்கும் அடுத்த மாதவிடாய்க்கும் இடைப்பட்ட காலத்தில் கருப்பபையின் என்டோமெட்ரியத்தில் நிகழும் சுழற்சி மாற்றங்களே மாதவிடாய் சுழற்சி எனப்படும்.<br>**மாதவிடாய் சுழற்சி 4 நிலைகளைக் கொண்டது.**<br>1. மாதவிடாய் நிலை.<br>2. பாலிக்குலார் நிலை அல்லது பெருகு நிலை.<br>3. அண்ட செல் விடுபடு நிலை.<br>4. லூட்டியல் அல்லது சுரப்பு நிலை.<br>**மாதவிடாய் நிலை (Menstrual phase):**<br>3. மாதவிடாய் சுழற்சியில் 3 – 5 நாட்கள் மாதவிடாய் ஏற்படுகிறது.<br>4. புரோஜெஸ்டிரான் மற்றும் ஈஸ்டட்ரரோஜன் ஹார்மோன்களின் அளவு குறைவதால் கருப்பபையின் உட்சுவரான என்டோமெட்ரியம் மற்றும் அதனோடு இணைந்த இரத்தக்குழல்கள் சிதைவடைந்து மாதவிடாய் வெளிப்படுகிறது.<br>5. விடுவிக்கப்பட்ட அண்டம் கருவுறாவிட்டடால் மட்டுமே மாதவிடாய் ஏற்படுகிறது.<br>6. மாதவிடாய் ஏற்படாமல் இருப்பது கருவுற்று இருப்பதற்ககான அறிகுறியாகும்.<br>**பாலிக்குலார் நிலை (அல்லது) பெருகு நிலை (Follicular phase or Proliferative phase):**<br>7. மாதவிடாய் சுழற்சியின் 5 ஆம் நாளில் இருந்து அண்டம் விடுபடும் வரை உள்ள காலம் **பாலிக்குலார் நிலை** எனப்படும்.<br>8. இந்நிலையில் அண்டகத்திலுள்ள முதல்நிலை நுண்பை செல்கள் முழுமையாக வளர்ச்சியடைந்து முதிர்ந்த கிராஃபியன் நுண்பை செல்களாக மாறுகின்றன.<br>9. அதே வேளையில் எண்டோமெட்ரியம் தன்னனைப் புதுப்பித்துக் கொள்கிறது.<br>10. நுண்பை நிலையில் நுண்பை செல்களைத் தூண்டும் ஹார்மோன் (FSH) மற்றும் லூட்டினைசிங் ஹார்மோன்களின் (LH) சுரப்பு அதிகரிப்பதால் அண்டகம் மற்றும் கருப்பபை தூண்டப்பட்டு மேற்கண்ட மாற்றங்கள் நிகழ்கின்றன.<br>11. இதனால் நுண்பை செல்களின் வளர்ச்சியும் அவற்றிலிருந்து சுரக்கும் ஈஸ்டட்ரரோஜனின் அளவும் அதிகரிக்கின்றன.<br>**அண்ட செல் விடுபடு நிலை (Ovulatory phase):**<br>12. மாதவிடாய் சுழற்சியின் 14 ஆம் நாளில் LH மற்றும் FSH ஹார்மோன்களின் அளவு உச்ச நிலையை அடைகிறது, இந்நிலை 'LH எழுச்சி' (LH surge) எனப்படும்.<br>13. இதனால் முதிர்ந்த கிராஃபியன் நுண்பை உடைந்து அண்ட அணு (இரண்டடாம் நிலை அண்டசெல்) வெளியேற்றப்பட்டு வயிற்றுக்குழியை அடைகிறது. இந்நிகழ்ச்சியே 'அண்டம் விடுபடுதல்' (Ovulation) எனப்படும். | 1<br><br><br><br><br><br><br>½<br><br><br><br><br>1<br><br><br><br><br><br><br><br><br><br>1<br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br>½ |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | **லூட்டியல் அல்லது சுரப்பு நிலை (Luteal or Secretory phase):**<br>14. லூட்டியல் நிலையில், எஞ்சியுள்ள கிராஃபியன் நுண்பை ஒரு இடைக்ககால நாளமில்லலாச் சுரப்பியான 'கார்பஸ் லூட்டியம்' (Corpus luteum) என்னும் அமைப்பபாக மாறுகிறது.<br>15. கார்பஸ் லூட்டியம் புரோஜெஸ்டிரான் ஹார்மோனை அதிக அளவில் சுரக்கிறது.<br>16. கருவுறுதல் நிகழ்ந்ததால், கருமுட்டடை பதிவதற்கு ஏற்ற சூழலை புரோஜெஸ்டிரான் உருவாக்குகிறது.<br>17. கருப்பபையின் உட்சுவர் ஊட்டடச்சத்து நிரம்பிய திரவத்ததை கருப்பபையினுள் வளரும் கருவிற்ககாக சிறிதளவு உற்பத்தி செய்கிறது. எனவே இது 'சுரப்பு நிலை' என்றும் அழைக்கப்படுகிறது.<br>18. கருவுறுதல் நிகழாவிட்டடால் கார்பஸ் லூட்டியம் முற்றிலுமாகச் சிதைவுற்று 'கார்பஸ் அல்பிகன்ஸ்' (Corpus albicans) எனும் வடுத் திசுவை உருவாக்குகிறது.<br>19. மேலும் என்டோமெட்ரிய சிதைவும் தொடங்குவதால் மாதவிடாய் ஏற்படுகிறது.<br>20. இது அடுத்த மாதவிடாய் சுழற்சியின் தொடக்கமாகும். | 1<br><br>(Total-5) |

பாரதிராஜா அ M.Sc., M.Ed., M.A., M.Phil., D.O.A
முதுகலை விலங்கியல் ஆசிரியர்,
தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி,
தேவகோட்டை.

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com